# 'கற்க; கற்றபடி ஒழுகுக'

உ
**சிவமயம்**

பழமுதிர்சோலை,
சிவபுரம்.
15.07.2001.

அன்புள்ள மகன் அறிவது,

எல்லாம் வல்ல சிவபெருமான் திருவருளால் நாங்கள் அனைவரும் நலமாக உள்ளோம். நீயும் நல்ல சுகத்துடன் இருக்க இறைவன் அருள் புரிவானாக.

உனது அன்புக் கடிதம் கிடைக்கப் பெற்றோம். வாசித்து மகிழ்ந்தோம். பாடசாலை விடுதியில் நீ மகிழ்ச்சியாக இருப்பதாகக் கடித மூலம் அறிந்த உன் அம்மா, ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளார்.

எங்கள் எல்லோர் மீதும் அன்பைக் கொட்டி எழுதியிருந்த கடிதத்தை வாசிக்க, வாசிக்க எங்களுக்குப் பெரு மகிழ்ச்சியாக உள்ளது. ஆனால் உனது பிரிவு மிகவும் கஷ்டமாகவுள்ளது. உன்னைப் பற்றியே நாங்கள் எப்போதும் கதைத்துக் கொண்டிருப்போம். உனது கல்வி முன்னேற்றத்திற்காக நாங்கள் எதைச் செய்யவும் தயாராகவுள்ளோம். எதற்கும் சிவனுண்டு பயமில்லை என்று திடமாக நம்பி இருப்போம்.

உன்னை ஒரு சைவப் பிள்ளையாக வளர்க்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். நீயும் இதனை அறிவாய். அதற்காகவே நான் எனது கடிதங்களில் சைவசமய ஒழுக்கம் பற்றிச் சில குறிப்புகளை எழுதுவது வழக்கம்.

மகனே, அதிகாலையிலேயே நித்திரை விட்டு எழுந்து விடுதல் வேண்டும். காலைக்கடன்களை நிறைவேற்றியவுடன் நீராடி, திருநீறு பூசி, தேவார பாராயணம் செய்து கடவுளை வணங்கி விட்டே மற்றைய கருமங்களைச் செய்யத் தொடங்குதல் வேண்டும்.

உன் தாயையும் தந்தையையும் எப்படி நேசித்து அன்பு செலுத்துகிறாயோ, அப்படியே உனக்குக் கல்வி போதித்து நல்வழி காட்டும் ஆசிரியர்கள் மீதும் அன்பாயிரு. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது சைவமரபு. கண்கண்ட தெய்வமாக் உள்ளவர்களே ஆசிரியர்கள் என்பது நீ அறியாதது அல்ல. குருவை நிந்தித்தல் சிவனை நிந்தித்தல் போன்ற பாவச் செயல் ஆகும். இதனை மறந்து விடாதே.

உன் அக்காவும், தம்பியும் உன் சேமம் விசாரித்ததாய்க் கூறச் சொன்னார்கள். நீ அவர்களுடன் மாறாத அன்பு கொண்டிருப்பது போலவே உன் மாணவ நண்பர்களுடனும் அன்பாயிரு. அவர்களுடன் வன்சொல் பேசுதல், சண்டையிடுதல், கோபித்தல் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்.

பாடசாலையிலே காலைப் பிரார்த்தனைகளிலே தவறாமல் கலந்து கொள். கூட்டுப் பிரார்த்தனை, பஜனை என்பவற்றையும் தவற விட்டு விடாதே. நீ நன்றாகத் தேவார திருமுறைகளைப் பாடுவாய் அல்லவா? சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவற்றைப் பாடத் தவறாதே.

நீ அணியும் ஆடைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்; அவற்றை அடிக்கடி தோய்த்து உலர்த்தி அணிந்து கொள். படுக்கைவிரிப்பு, தலையணை உறை, துவாய் என்பவற்றையும் காற்று, சூரியஒளி படும் இடங்களில் உலரவிட்டுச் சுத்தமாக வைத்திருத்தல் அவசியம் என்பதை மறவாதே.

பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள பிள்ளையார் கோயிலுக்கு வெள்ளிக்கிழமை தோறும் சென்று மாலைப் பூசை ஆராதனைகளிலே


6. S. P. C. 120288

கலந்து கொள். சைவசமய பாடத்தைக் கற்றால் மட்டும் போதாது. கற்றபடி ஒழுகவும் வேண்டும். மிகுதி விடயங்களை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

**இறைவன் துணை**
**அன்பே சிவம்**

இப்படிக்கு,
உன்மீது பாசமுள்ள
அப்பா.

## செயற்பாடு

* நல்ல விடயங்களை அறிவுறுத்தி, உமது நண்பருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.